# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.78/2021

2024 ம் ஆண்டு ஜூன் மாதம் 12 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 12.06.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதா | ஜாதி | : | |
| த /பெயர் | : | சிவசுப்ரமணியன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கும், என் கணவருக்கும் விக்ரபாண்டியம் கிராமம் தான் பூர்வீகம் ஆகும். அந்த கிராமத்தில் என் தகப்பனார் ஊராட்சி மன்றத்தலைவராக இருந்தார். அவருக்கு பின்னால் என் சகோதரர் ஊராட்சிமன்றத்தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வேதமூர்த்தி எனது உறவினர் இல்லை. என் மாமனாரின் தூரத்து உறவினர் ஆவார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது கிராமத்தை சேர்ந்த நபர்கள் ஆவார்கள். 2 ம் பிரதிவாதி தனிக்கொடி எனது வீட்டிற்கு கிழக்கு பக்கத்திலுள்ள ஆற்றை தாண்டியுள்ள பகுதியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். கஜா புயலின்போது அந்த பகுதி முழுவதும் முழ்கிவிட்டது என்றாலும், தற்போது அந்த இடத்தில் வீடுகள் இல்லை என்றால் சரிதான்.

2. விக்ரபாண்டியம் புரத்திலுள்ள அய்யானார் கோவில் பக்கத்திலுள்ள ஆலமரம் உள்ள பகுதியில் இலவசமாக வீடு கட்டி வசித்து வந்தார் என்றால் இல்லை. என் வயலுக்கு பக்கத்தில் தான் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதி வேதமூர்த்தி மழவராயர்நல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து விக்ரபாண்டியம் கிராமத்திலுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை என் மாமனார் என் கணவருக்கு வாங்கி வைத்தார். என் கணவர் கடந்த 2021-ல் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். தாவா சொத்துக்கள் நஞ்சை நிலங்கள் ஆகும். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் புல எண்.372/3-ல் 74 எர்ஸ் மற்றும் 371/1-ல் 74 .50 எர்ஸ் ஆகும். சுமார் எத்தனை மா என்றால் 4.3/4 மா இருக்கும்.

3. எந்த வாய்க்கால் வழியாக பாசனம் நடைபெறுகிறது என்றால்? கிழக்கு மேற்கு நோக்கி ஒரு வாய்க்கால் செல்கிறது. அதன் வழியாக தான் பாசனம் நடைபெறுகிறது. எனக்கு சொந்தமான வயலுக்கு மேற்கு பக்கத்தில் 2ம் பிரதிவாதி வசித்து வருகிறார். 3ம் பிரதிவாதியும் அங்கு தான் குடியிருந்து வருகிறார். தாவா சொத்து சம்மந்தமாக எங்கள் ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டதா?

என்றால் இல்லை. விக்ரபாண்டியம் ஊராட்சி மன்றத்தலைவர் ஆலத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் விக்ரபாண்டியம் அனைத்து கட்சி பிரமுகர்களும் தாவா சொத்து தொடர்பாக பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரியல்ல. ஊராட்சிமன்றத்தலைவர்களுடன் எனக்கு விரோதம் உள்ளதா? என்றால் இல்லை.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.